


உ

சிவமயம்

# “லோகதீபம்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சரசாலை ஊரைப் பிறப்பிடமாகவும்

சாவகச்சேரி நகரை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# நவரத்தினம் லோகேஸ்வரி

அவர்களின் சிவப்பேறு குறித்த

# "லோக தீபம்"

**26.02.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத் தலைவியாய்
எம் குல விருட்சமாய் விளங்கி
இடும்பை களைந்த இனியவரே!
அம்மா! எம் அம்மா!
அன்பில் அருளில் அனைவரையும்
அணைத்து நிற்கும்,
பண்பில் – வந்தாரை வரவேற்று மகிழ்ந்து
விருந்தளிக்கும் மாண்பில் நிகரற்று,
விளங்கிய எம் தாயே!
எமை இன்று பிரிந்தீர்.
இறையடியே தஞ்சமெனப் போனீர்!
எம் பேர் வாழும், நீர் எம்மிற் பதித்த
பண்புகள் வாழும்!
எம் அருமைத்தாயே!
உங்கள் ஆத்மா – செருக்கல் சித்திவிநாயகர்
திருவருள் துணைகொண்டு, எம் குலதெய்வமாம்
வீரபத்திரர் திருத்தாள்களை சென்றடைய
பிரார்த்தித்து "லோகதீபம்" எனும் மலரினை உம்
பாதங்களில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**அன்னை மடியில்**
**1951.03.07**

அமரர்

**இறைவனடியில்**
**2023.01.27**

# லோகேஸ்வரி நவரத்தினம்

**திதி நிர்ணயம்**

சொல்லவரு சுபகிருதில் சுடர்ந்திடுதை மாதமதில்
வல்லவளர் வழுங்குதிதி சப்தமியில் - நல்லவராம்
போற்றுநவ ரத்தினந்தன் பூவையர்லோ கேஸ்வரியார்
சாற்றுமுயர் வீடுற்றார் சார்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

ஓவு நாள்உணர் வழியும் நாள்உயிர்
போகும் நாள்உயர் பாடைமேல்
காவும் நாள்இவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவ தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே

## திருவாசகம்

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்துறையுங் கூத்தாகவும் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலையில்வீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி
யுமை மணவாளனுக்காட்
பாரும்விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பங்கயக்கண் அருவிநீர் பாய நின்று
பரவும் இசைத் திருப்பதிகம் பாடியாடித்
தங்கு பெருக் கனிகாதல் தகைந்து தட்பத்
தம் பெருமான் கழல் பேற்றுந் தன்மை நீட
அங்கரிகற் புறம் போந்தவ் கயன்மால் போற்ற
அறியாந்தந் திருமறைக்கீழ் அணைந்தி றைஞ்சிப்
பொங்கு திருத் தொண்டர்மடங் கட்ட அங்குப்
புக்கருளி இனிதமர்ந்தார் புகலிவேந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனா
இபமா முகன் தனக் கிளையோனோ
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

## வாழ்த்து

வையக நீடுக மாமன்பு மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி நாந்தழைத்தோங்குக
தெயற்வ வெண் திருநீறு சிறக்கவே
திருச்சிற்றம்பலம்

## கணபதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## வீரபத்திரர்

பார பத்திர அம்பு பலகையில்
கோர பத்திரத் தண்டுகைக் கொண்டுடன்
வார பத்தியில் தக்கன் மகம்செற்ற
வீர பத்திரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

உரித்தது பாம்பை உடல்மிசை இட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததொர் ஆமையை இன்புறப் பூண்டது முப்புரத்தை
செருத்தது சூலத்தை ஏந்திற்றுத் தக்கனை வேள்வி பன்னூல்
விரித்தவர் வாழ்திரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நவரத்தினம் லோகேஸ்வரி அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

இந்துமா சமுத்திரத்தின் முத்தான இலங்கைத்தீவின் வடபால் அமைந்த யாழ் மாவட்டத்தில் முக்கனிச்சோலைகள் சூழ்ந்ததும் தென்னை, பனை மரவளங்களும் பசுமை நிறை வயல் நிலங்களையும் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்திலமைந்த சரசாலை மண்ணில் வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் மகளாக 07.03.1951 ல் இப்பூவுலகில் ஜனனமானார்.

இவருக்கு லோகேஸ்வரன், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோர் அன்புச்சகோதரங்களாக வாய்க்கப் பெற்றனர். இவர் தனது ஆரம்பக்கல்வியை சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் கற்று திறமையும் ஆர்வமும் உள்ள மாணவியாகத் திகழ்ந்தார். தனது பாடசாலைக்காலம் வரை வகுப்பில் முதல்தர மாணவி என்ற நிலையைப்பிடித்து அதிபர் ஆசிரியர்களின் அபிமானமுள்ள மாணவியாக விளங்கினார். ஆனால் இவரது தாயாரின் உடல் நலக்குறைவு இவர் மேற்படிப்பைத் தொடரமுடியாத துர்ப்பாக்கியமாக அமைந்தது. இதனால் படிப்பை இடையிலே நிறுத்த வேண்டியேற்பட்டதால் மிகவும் கவலை கொண்டார். எனினும் மனதைத் தேற்றி வீட்டு வேலைகளில் தாய் தந்தையருக்கு உறுதுணையாக உறவினருக்கு மிக உவப்பானவராக வளர்ந்து வந்தார். இவர் மீது கொண்ட அன்பு மிகுதியால் உறவினர்கள் எல்லோரும் இவரது பெயர் சொல்லி அழைக்காத "பெரியபிள்ளை" என்று தான் பாசமாக அழைப்பார்கள்

இவ்வாறு வளர்ந்து வரும் காலத்தில் மணப்பருவத்தில் காலடி வைக்கும் பருவமும் வந்து சேர பெற்றோர் சொந்த மாமியின் மகனான காராளர் நவரத்தினம் என்பவரை 1972 ல் திருமணம் செய்து வைத்து மகிழ்வடைந்தனர். வர்த்தகத்தில் புகழ்பூத்த வாழ்க்கைத்துணைவருடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். தம் இனிய இல்லறத்தின் இனிய பேறாக வித்யா, சுகந்தன், லதா, தீபா என நான்கு மழலைச் செல்வங்ளைப் பெற்று பெருமகிழ்வு அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கணவரின் வர்த்தக நிறுவனங்கள் சாவகச்சேரி நகரில் அமைந்தமையால் இவரது கணவர் சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் அழகிய ஒரு வீடு கட்டி அதை வாழ்விடமாக்கிக் கொண்டார். இதனால் 1984 ம் ஆண்டிலிருந்து தபாற்கந்தோர் வீதி அங்குள்ள அயலவர்கள் யாவருடனும் அன்பு பாராட்டி நட்புடன் வாழ்ந்து வந்தார் லோகேஸ்வரி அவர்கள். இவர் அயலில் அமைந்துள்ள செருக்கல்பிள்ளையார் மீது மிகுந்த பக்தி உடையவராக விளங்கி சதுர்த்தி விரதநாட்கள், திருவிழாக்காலங்களில் மாலைகட்டிக் கொடுப்பதிலும் பஜனை பாடுவதிலும் மிகுந்த இன்பம் கொண்டார்.

இவரது இணைபக்தியும் விருந்தோம்பல் பண்பும் இவரது பிள்ளைகளையும் நல்லநிலைக்கு உயர்த்தியது. இவரது மூத்தமகள் வித்யா கலைப்பட்டதாரியாகி அபிவிருத்தி உத்தியோகத்தராக யாழ்/ சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் பணிபரிந்து வருகிறார். இவர் யோகானந்தம் மாறன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) என்பவரைத் திருமணம் செய்து செந்தூரி, ஸஞ்சய், சாதனா என்னும் பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்வாக வாழ்ந்து வருகிறார்.

இவரது மகன் சுகந்தன் யாழ் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று அரச வேலைவாய்ப்புப் பெறும் தகுதி பெற்றும் தந்தையாரின் விருப்பம் காரணமாக அரச பதவிக்குச் செல்லாது தந்தையாரின் வர்த்தக நிறுவனமான "விமலாஸ்" நிறுவன உரிமையாளராகி தந்தையுடன் வாழ்ந்து வரும் வேளையில் 2013ம் ஆண்டு இளவாலையைச் சேர்ந்த பூபாலசிங்கத்தின் மகள் உஷாயினியைக் கரம் பிடித்து இல்லற பந்தத்தில் இணைந்து கொண்டார். இவர்களின் இல்லறத்தின் இனியபேறாக சாத்மீகா, சாஸ்விகன் என்ற பிள்ளைச்செல்வங்களைப் பெற்று இனிதே வாழ்ந்து வருகின்றார்.

மூன்றாவது மகள் லதா சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்விகற்ற பின் மீசாலையைச் சேர்ந்த தங்கராசா சுதாஸ்கரன் (பிரான்ஸ்) என்பவரை மணம் செய்து இல்லறதத்தின் இனியபேறாக ஆதித்தியன், ஆருஜி என்ற குழந்தைச் செல்வங்களைப் பெற்று குதூகலமாக வாழ்ந்து வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கடைக்குட்டி செல்வ மகள் தீபா விவசாயத்துறைப் பட்டதாரியாகி குடியேற்றத் திட்ட உத்தியோகத்தராக வவுனியாவில் பணியாற்றிய வேளை புங்குடுதீவைச் சேர்ந்த கணேஸ் ரஜீந்திரதாஸ் (பொறியியலாளர்) என்பவரைத் திருமணம் செய்து அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வருகின்றார்.

மேலும் லோகேஸ்வரி அவர்கள் தன்னுடைய குடும்ப வேலைகளை நேர்த்தியாகச் செய்வதோடு சமூகப்பணிபுரிவதிலும் ஆர்வம் காட்டினார். தென்மராட்சிப் பிரிவில் அமைந்த மாதர் சங்கத்தின் தலைவியாக இருந்து பல பணிகளை ஆற்றியுள்ளார். மாதர் சங்கக் கூட்டங்கள் பிரிபுசார நிகழ்வுகளில் உரையாற்றும் சிறந்த பேச்சாளி என்ற பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். வீட்டுக்கு அயலில் அமைந்த மகளிர் கல்லூரியில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் பங்குகொள்ளத் தவற மாட்டார். இவை மட்டுமல்ல இவரது கணவர் லயன்ஸ் கழக சிரேஸ்ட உறுப்பினர். அத்துடன் பல தடவைகள் தலைவராகவும் இருந்த வேளைகளில் இவர்களது வீட்டில் நடைபெறும் கூட்டங்களுக்கும், விருந்து உபசாரங்களிலும் கணவருக்கு உறுதுணையாக நின்று ருசியான உணவுகளைச் செய்து பரிமாறி பலரது பாராட்டுக்களுக்கும் உரியவரானார். மேலும் தபாற்கந்தோர் வீதியில் நடைபெறும் திருமணவைபவங்கள், பூப்புனித நீராட்டுக்கள் போன்றவற்றில் சிற்றுண்டிகள், பலகாரங்கள் செய்யும் தலைமைப் பொறுப்பு இவருக்கே வழங்கப்பட்டது. அவ்வளவு சமையற்கலையில் கைதேர்ந்தவராக விளங்கினார்.

மேலும் சாவகச்சேரியில் இவரது இல்லம் (கருணாலயம்) ஓர் உறவுகளின் சங்கமமாக விளங்கியது எனலாம். வெளியூர்களிலிருந்து வரும் உறவினர்கள் சொந்த ஊரான சரசாலையில் நடைபெறும் இன்பதுன்பங்களுக்கு வரும் போது இவரது இல்லத்தில் ஒன்றுகூடி மகிழ்ந்து விருந்துண்டுதான் நிகழ்வுகளுக்கு செல்லுமளவிற்கு உறவுப்பாலமாக விருந்தோம்பல் பண்பில் உயர்ந்தவராக விளங்கினார். தனது வீட்டிலே 4 வருடங்களாக தனது நோய்வாய்ப்பட்ட அண்ணாவை உபசரித்து பராமரித்து வந்துள்ளார். சகோதரிகள் அவர்களின் துணைவர்கள் அனைவருக்கும் ஓர் அன்னையாகவே அன்பு காட்டி அரவணைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இல்லறத்தில் இனிமையாக ஐம்பது வருடங்களில் அடிவைக்கும் வேளையில் அவசரமாக ஆண்டவன் அவரது அடியிணைக்கு அழைத்து விட்டான். 27.01.2023 ல் தனது இவ்வுலக வாழ்வை நீத்து ஆற்றொணாத் துயரைத் தந்து திருக்கைலாயன் திருப்பாதம் சென்றடைந்தார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி.

## நந்தி

1. நந்தி என்றால் ஆனந்தம், மகிழ்ச்சி தருபவர் என்று பொருள்.
2. நந்தியின் வேலை தடுப்பது ஆகும். அதாவது இவர் அனுமதி பெறாமல் ஈசன் உறையும் இடங்களுக்குள் யாராலும் செல்ல இயலாது. நந்தி அனுமதி கிடைத்தால்தான் ஈசன் அருளைப் பெற முடியும். எனவேதான் முக்கிய சம்பவங்களின் போது யாராவது தடுத்தால். "எவன் இவன் நந்தி மாதிரி தடுக்கிறான்" என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது.
3. பிரதோஷ காலங்களில் நந்தியை தவறாமல் வழிபடுபவர்களுக்கு அருள் வரம் தரும் பேறு கிடைக்கும் என்பது உறுதி.
4. நந்தி தேவர் சிவபெருமானுக்கு பூஜை செய்யும் அற்புத காட்சி ஒன்று நாகை மாவட்டம் ஆத்தூர் மந்தாரவனேசுவரர் கோவிலில் உள்ளது.
5. சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள ஆதி புரீஸ்வரர் கோவிலில் பிரமாண்ட அதிகார நந்தி வாகனம் உள்ளது. இந்த அதிகார நந்தியை தமிழ்ப் பேரறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தந்தை பொன்னுசாமி கிராமணி என்பவர் செய்து கொடுத்தார்.
6. ஆந்திர மாநிலம் லேபாட்சியில் உள்ள கருங்கல்லில் வடிக்கப்பட்ட நந்தியே இந்தியாவில் உள்ள கல் நந்திகளில் பெரிய நந்தியாம்.
7. தமிழ்நாடு மக்களுக்கு நந்தி என்றதும் தஞ்சைப் பெரிய கோவில் நந்திதான் நினைவுக்கு வரும். இந்த நந்தி ஒரே கல்லால் ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வாராஹி தேவி அவதாரம்

பண்டாசுரன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவ்வசுரனின் தோளில் இருந்து விசுக்ரன் என்பவன் தோன்றினான். இவன் தவம் இருந்து ஒரு அதிசய வரத்தினைப் பெற்றான். எனக்கு மரணம் ஏற்படுவதாக இருந்தால் அது தாயின் வயிற்றில் பிறக்காத ஒரு பெண்ணால் மட்டுமே ஏற்பட வேண்டும். மேலும் அந்தப் பெண்ணும் பன்றி முகம் உடையவளாகவும் இருக்க வேண்டும் என வரம் பெற்றான்.

தாயின் வயிற்றில் பிறக்காமல் பெண் உருவாக முடியாது. மேலும் அழகை விரும்பும் எந்தப் பெண்ணும் பன்றி முகத்துடன் தோன்ற விரும்பமாட்டாள் என்பது அவனது நம்பிக்கை. எனவே, தனக்கு நிச்சயம் மரணம் ஏற்படாது என்பது அவனது அசைக்க முடியாத நம்பிக்கை.

எனவே, தேவர்களை அச்சுறுத்தி, துன்புறுத்தி அழித்து வந்தான். அவன் தொல்லைகளைத் தாங்க முடியாத தேவர்கள் அவனிடமிருந்து தப்பிக்க ஒரு பெரிய யாகம் வளர்த்தனர். அந்த யாகத் தீயில் தங்கள் கை, கால் முதலியனவற்றையும் வெட்டிப் போட்டு லலிதாம்பிகையின் வரம் வேண்டினர். அவர்களின் பக்தியின் பெருமை கண்டு மகிழ்ந்த லலிதாம்பிகை யாகத்திலிருந்து தோன்றி அவர்களைக் காப்பதாக அருளினாள்.

உடனே ஸ்ரீ லலிதாம்பிகை ஸ்ரீவாராஹியை பன்றி முகத்துடன் தோற்றுவித்தாள். அசுரனை அழித்து தேவர்களைக் காக்கும்படி அன்னை ஸ்ரீ லலிதாம்பிகை கூறினாள்.

தன்னை எதிர்க்க பன்றி முகத்துடன் வந்த ஸ்ரீவாராஹி தேவியைக் கண்டு விசுக்ரன் அஞ்சினான். ஆனாலும் அவனது அசுரகுணம் ஸ்ரீவாராஹியை எதிர்க்கத் தூண்டியது. அவனது தந்தை பண்டாசுரனுடைய மந்திரிகள் விசுக்ரனுக்குத் துணை நின்றார்கள். அவர்கள் கோடி சூரியனின் பிரகாசத்தை உடையவர்கள். அவர்களின் ஒளிமயமான உடலைக் கண்ட தேவர் படைகள் திகைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே ஸ்ரீவாராஹி ஒரு கணையை ஏவினாள். பண்டாசுரனின் அமைச்சரின் கண்கள் குருடாகின. அவர்களின் தலைகளை வெட்டி எடுத்து மாலையாக அணிந்து கொண்டாள். அதன்பின் விசுக்கிரனையும் கொன்றாள்.

## வாராஹி துதி

வாராஹி பாதமதைப் பற்றிடுவோர்க்கு
வரமது தந்திடுவாள் - அவள்
ஓடோடி வந்தே உயர்வினைத் தந்தே
உறுதுணை ஆகிடுவாள்!
உள்ளம் வெள்ளம் ஆனந்தமென்றே
உணர்வில் நின்றிடுவாள்அவள்
உள்ளம் தந்திடும் நோய்களையெல்லாம்
பஸ்பம் செய்திடுவாள்!
கள்ளம் இல்லா நெஞ்சத்துடனே
கற்பனை தந்திடுவாள் - அவள்
எங்கும் எதிலும் இன்பப்பெருக்காய்
இதயம் நிறைந்திருவாள்!
சொல்லும் சொல்லை அவளுக்கென்றால்
சொந்தும் துணையாவாள் - அவள்
கொல்லும் நோய்நொடி பொடிப் பொடியாக
வேங்கை வடிவெடுப்பாள்!
குதிரை மீதினானில் அமர்ந்தாளவளை
கொண்டாடி மகிந்திடவே - அவள்
மதுரை மீனாட்சி காமாட்சியென்றே
மனதினில் பலமாவாள்!
எத்தனை நோய்கள் எப்படியாயினும்
செப்பிடு வித்தையவள் - அவள்
எத்தனை விழிகளை மோகித்திருக்கவே
மெத்தம் வளமாவாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தி

"அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே"

- திருமூலர் திருமந்திரம்

சிலாத முனிவர் - சாரு லட்சனை தம்பதிக்கு நெடுங்காலமாக புத்திர பாக்கியம் கிட்டவில்லை. அதனால் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்தார் சிலாதர். அவரது தவத்துக்கு இரங்கிய சிவபெருமான் மழலை வரம் அருளினார். இறை அருளால் பிறந்த பிள்ளைக்கு நந்தி எனப் பெயர் சூட்டி வளர்த்தனர்.

ஆனாலும் மகன் பிறந்த மகிழ்ச்சியை அத் தம்பதியர் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. ஏனெனில் பிள்ளைக்கு ஆயுள் எட்டு வருடங்கள்தான் என்ற நிபந்தனை விதித்திருந்தார் சிவபெருமான்.

அந்தக்காலம் நெருங்க நெருங்க பெற்றோரின் கவலை அதிகரித்தது. இதை உணர்ந்த சிறுவனான நந்தி காரணம் கேட்க, வேறு வழியின்றி உண்மையைக் கூறினர். "கவலை வேண்டாம்" என்று அவர்களை ஆறுதல் படுத்திய நந்தி, தனியே சென்று சிவனைக் குறித்து தவம் மேற்கொண்டான். சிவனருளால் பூரண ஆயுள் பலமும், கயிலைக்கே காவலனாகும் பேறும் பெற்றான். அதனால் அதிகார நந்தி எனப் பெயரும் பெற்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்தி தத்துவம்

நந்தியின் நிறம் வெள்ளை, வெண்மை தூய்மையைக் குறிப்பது. அறமாகிய தர்மத்தின் நிறமும் வெண்மையே, நந்தி தூய்மையும் ஆண்மையும் நிறைந்தது. ஆக, தர்மதேவதையே சிவபெருமானின் வாகனமாக அமைந்துள்ளது. சிவபெருமானின் வாகனமும் கொடியும் ரிஷபமே (காளை).

தருமதேவதை, சிவபெருமானிடம் தன்னை வாகனமாக ஏற்கும்படி கூறியது. அவ்வேண்டுகோளுக்கு இணங்க சிவபெருமான், ஒவ்வொரு யுகத்திலும் நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பாதங்களால் நீ நடக்க வேண்டும். நானே உனக்கு உயிராய் இருந்து உன்னை நடத்துவதால் நம்மை வணங்குவோர் செய்யும் பாவங்கள் கூட அறமாக மாறும் என்று வரமருளினார் சிவபெருமான்.

சிவாலயங்களில் உள்ள நந்திதேவர் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை மட்டும் நிமிர்த்தியுள்ளதை நாம் காண முடியும். கலியுகத்தில் ஒரு காலால் நடக்க வேண்டும் என்ற சிவபெருமானின் ஆணைக்கேற்பவே அவ்வாறு உள்ளது.

## நந்தி வழிபாட்டுக்கான கிழமைப்பலன்

பிரதோஷ தின நந்தி வழிபாட்டில் ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு பலன் உண்டு.

ஞாயிறு - சுப மங்களத்தைத் தரும்.

திங்கள் - சோம சூத்ர பிரதட்சிணநாள். நல்ல சிந்தனைகள் தரும். பல அசுவமேத யாகங்கள் செய்த பலன்கிட்டும்.

செவ்வாய்- வறுமை விலகும்.

புதன் - புத்திரப்பேறு கிட்டும். கல்வி கேள்விகளில் திறமை வலுப்பெறும்.

வியாழன் - குருவருளோடு, இறை அருள் கிடைக்க பித்ருக்கள் உதவுவர். அனைத்து ஆபத்தும் விலகிப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி - எதிர்ப்புகள் நீங்கும். எதிரிகள் வலுயிழப்பார்கள்.
சனி - மகா பிரதோஷ நாள். பதவி உயர்வு வரும். அஷ்ட லக்ஷ்மிகளின் பரிபூரண ஆசி கிடைக்கும்.

## பிரதோஷ அபிஷேகப் பொருட்களும் அவற்றின் நன்மைகளும்

தண்ணீர் - மனத்தூய்மை
மஞ்சள் - வசீகரம், மங்கலம், நல்லநட்பு பெருகும்.
பச்சரிசி
மாவுப்பொடி - கடன் தீரும், குபேரசம்பத்து உண்டாகும்.
பால் - ஆயுள் விருத்தி
தயிர் - குழந்தை பாக்கியம், உடல் வலு
பஞ்சாமிர்தம் - நீண்ட ஆயுள், உடல் பலம், வெற்றி.
நெய் - சுக வாழ்வு
தேன் - சூரலினிமை
நல்லெண்ணெய் - பக்தி, சுகம், நலம் பெருகும்.
கரும்புச்சாறு - தோஷம், பிணி நீங்கும்.
சர்க்கரை - பகை, எதிரிகள் ஒழிவர்
பழ வகைகள் - வியாபார முன்னேற்றம்
எலுமிச்சை - மரணபயம் நீங்கும்
இளநீர் - ராஜயோக, நல்ல மக்கட்பேறு
அன்னாபிஷேகம் - அரசுப் பதவிகள் கிட்டும்
கற்கண்டு - ஒற்றுமை ஓங்கும்
விபூதி - சகல ஞானமும் கைகூடும்
குங்குமம் - மங்களம் உண்டாகும்.
மலர்கள் - தெய்வ தரிசனம் கிட்டும்
பன்னீர் - சரும நோய்கள் அகலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ வழிபாடு

## நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்!
சிறப்புறு மக்கள் சேர்வர்!
இரந்திர போகம் கிட்டும்!
இணையிலா வாழ்வு தானே!

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குவதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்
ஒன்பது கோள்களுக்கும் உயரியபலம் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்

சிந்தனை வளம்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந்தெம்மைக் காப்பாய்
மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்கவைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையில் வண்ணப் பூவைச் சூடிடும் நந்தி தேவா
நாளும் நான் உனை துதித்தேன் நாடி வந்தெம்மை காப்பாய்

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல்வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர வேந்தன் அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாய் உனையடைந்தேன் தயங்காது எமைக் காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரா

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளக்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சையிலே பெரிய நந்தி
சேர்ந்த திருபுன் கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

கும்பிட்ட பக்தர் துயர்நீக்கும் நந்தி
குடம்குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்விக்க எம் இல்லம் வருக நந்தி!
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

## நாட்டமுள்ள நந்தி

நந்தியிது நந்தியிது நாட்டமுள்ள நந்தியிது
நந்தனுக்கு நலம்புரிந்த நலமான நந்தியிது
செந்தூரப் பொட்டுவைத்து சிலிர்த்துவரும் நந்தியிது
சிந்தையில் நினைப்பவர்க்கு செல்வம்தரும் நந்தியிது (நந்தி)

தில்லையில் நடனமாடும் திவ்யநாதன் நந்தியிது
எல்லையில்லா இன்பம்தரும் எம்பெருமான் நந்தியிது
ஒற்றை மாடோட்டியெனும் உலகநாதன் நந்தியிது
வெற்றிமேல் வெற்றிதரும் வேந்தன்நகர் நந்தியிது (நந்தி)

பச்சைக்கிளி பார்வதியாள் பவனிவரும் நந்தியிது
பார்ப்பவர்க்கு பலன்கொடுக்கும் பட்சமுள்ள நந்தியிது
சங்கம் முழங்கவரும் சங்கரனின் நந்தியிது
எங்கும் புகழ்மணக்கும் எழிலான நந்தியிது (நந்தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவன் வளர்த்துவந்த கொடும்பாளூர் நந்தியிது
நற்றவர் பாக்கியத்தால் நமக்குவந்த நந்தியிது
நெய்யிலே குளித்துவரும் நேர்மையுள்ள நந்தியிது
ஈஎறும்பு அணுகாமல் இறைவன்வரும் நந்தியிது (நந்தி)

வானவரும் தானவரும் வணங்குகின்ற நந்தியிது
காணவரும் அடியவர்க்கும் கருணைகாட்டும் நந்தியிது
உலகத்தார் போற்றுகின்ற உத்தமனின் நந்தியிது
நகரத்தை வளர்த்துவரும் நான் மறையின் நந்தியிது (நந்தி)

## நமசிவாய மாலை

ஓம் நமசிவாயஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாயஓம் ஓம் நமசிவாய

ஆதியான அஞ்சிலும் அனாதியான நாவிலும்
சோதியான மூன்றிலும் சொரூபமற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலும் நிறைந்து நின்ற வஸ்துவை
ஆதியான தொன்றுமே யற்றதஞ் செழுத்துமே

சக்தி நீ தயவு நீ தயங்கு சங்கினோசை நீ
சித்தி நீ சிவனும் நீ சிவாய மாமெழுத்து நீ
முத்து நீ முதலும் நீ மூவரான தேவர் நீ
அத்திபுர மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே

ஆறு நாடு தேடினும் ஆனை சேனைதேடினும்
கோடிவாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடி இட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தர்மம் வந்து நிற்குமே

கண்ணிலே இருப்பவனே கருங்கடல் கடந்துமால்
விண்ணில் இருப்பவனே மேவியங்கு நிற்பனே
தன்னுளே இருப்பவனே தராதலம் படைத்தவன்
என்னுளே இருப்பவனே எங்குமாகி நிற்பனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டமேழு முழலவே யனிந்தயோனி யுழலவே
பண்டு மாலயனுடன் பரந்து நின்றுழலவே
எண்டிசை கடந்து நின்றிருண்ட சக்தியுழலவே
அண்டரண்ட மொன்றதாய் ஆதி நடமாடுமே.

## நந்திதேவர் வணக்கம்

**[ஆடுக ஊஞ்சல் ஆடுகவே என்ற மெட்டு]**

வழிவிடு நந்தி வழிவிடுவே
வாழ்வில் நாங்கள் வளர்ந்துயர
வழிவிடு நந்தி வழிவிடுவே
வையகம் வளர வழிவிடுவே (வழிவிடு)

எம்பிரான் சிவனைச் சுமப்பவனே
எல்லா நலனும் தருபவனே
ஏழைகள் வாழ்வில் இருளகல
என்றும் அருளைச் சுரப்பவனே (வழிவிடு)

நீரில் என்றும் குளிப்பவனே
நெய்யில் என்றும் மகிழ்பவனே
பொய்யில்லாத வாழ்வு தர
பொங்கும் கருணை வாரிதியே (வழிவிடு)

உந்தன் கொம்பும் இரண்டிடையே
உமையாள் பாகன் காட்சிதர
தேவர் எல்லாம் அருள் பெற்றார்
தேனாய் இனிக்கும் செய்தி அப்பா (வழிவிடு)

தேடிய பலனைத் தந்திடுவாய்
தேவர் போற்றும் நந்திதேவா
வாழ்வில் வளமே வந்துயர
வழியே காட்டி அமைந்திடுவாய் (வழிவிடு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனார் போற்றும் நந்தி தேவா
நாலுந் தெரிந்த வல்லவனே
எம்பிரான் அருளை எமக்கருள
என்றுந் துணையாய் நிற்பவனே (வழிவிடு)

பிரதோஷம் என்றால் உன் மகிமை
பெரிதும் வெளியில் தெரிந்திடுமே
தேவர்க்குக் காட்சி உன்மூலம்
தெரிய செய்த பெரியவனே (வழிவிடு)

## நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான்தன்னை நாள்தோறும் வழிபட்டால்
புத்தியில் ஞானம் சேரும் புகழ்கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழ உண்டு!
அவ்வுலக அருளும் கூட அவர்துதி பாட உண்டு!
முற்பிறவி வினைகள் யாவும் தீயிட்ட மெழுகாகும்
நந்தியின் பார்வை பட நலங்கள்உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும்
நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோம்!

## குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நம
ஓம் ஷண்மத பதயே நமோ நம
ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நம
ஓம் ஷட்கிரீட பதயே நமோ நம 4
ஓம் ஷட்கோண பதயே நமோ நம
ஓம் ஷட்கோச பதயே நமோ நம
ஓம் நவநிதி பதயே நமோ நம
ஓம் சுபநிதி பதயே நமோ நம 8
ஓம் நரபதி பதயே நமோ நம
ஓம் சுரபதி பதயே நமோ நம
ஓம் நடச்சிவ பதயே நமோ நம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஓம் | ஷடக்ஷர | பதயே நமோ நம | 12 |
| ஓம் | கவிராஜ | பதயே நமோ நம | |
| ஓம் | தபராஜ | பதயே நமோ நம | |
| ஓம் | இகபர | பதயே நமோ நம | |
| ஓம் | புகழ்முனி | பதயே நமோ நம | 16 |
| ஓம் | ஜயஜய | பதயே நமோ நம | |
| ஓம் | நயநய | பதயே நமோ நம | |
| ஓம் | மஞ்சுள | பதயே நமோ நம | |
| ஓம் | குஞ்சரி | பதயே நமோ நம | 20 |
| ஓம் | வல்லீ | பதயே நமோ நம | |
| ஓம் | மல்ல | பதயே நமோ நம | |
| ஓம் | அஸ்த்ர | பதயே நமோ நம | |
| ஓம் | சஸ்த்ர | பதயே நமோ நம | 24 |
| ஓம் | ஷஷ்டி | பதயே நமோ நம | |
| ஓம் | இஷ்டி | பதயே நமோ நம | |
| ஓம் | அபேத | பதயே நமோ நம | |
| ஓம் | சுபோத | பதயே நமோ நம | 28 |
| ஓம் | வியூஹ | பதயே நமோ நம | |
| ஓம் | மயூர | பதயே நமோ நம | |
| ஓம் | பூத | பதயே நமோ நம | |
| ஓம் | வேத | பதயே நமோ நம | 32 |
| ஓம் | புராண | பதயே நமோ நம | |
| ஓம் | பிராண | பதயே நமோ நம | |
| ஓம் | பக்த | பதயே நமோ நம | |
| ஓம் | முக்த | பதயே நமோ நம | 36 |
| ஓம் | அகார | பதயே நமோ நம | |
| ஓம் | உகார | பதயே நமோ நம | |
| ஓம் | மகார | பதயே நமோ நம | |
| ஓம் | விசாக | பதயே நமோ நம | 40 |
| ஓம் | ஆதி | பதயே நமோ நம | |
| ஓம் | பூதி | பதயே நமோ நம | |
| ஓம் | அமார | பதயே நமோ நம | |
| ஓம் | குமார | பதயே நமோ நம | 44 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலாவக் கிழி அருளிய படலம்

குலபூடண பாண்டியன் சோமவார விரதம் கொண்டாடியது போல் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான். அந்தச் செருக்கினால் அவன் தன் நாட்டில் வாழ்ந்த அந்தணர்களை அவமதித்தான். அதனால் மழைவளங் குறைந்தது: பஞ்சம் நிறைந்தது. அவன் நாட்டில் வாழ்ந்திருந்த பிராமணர்கள் ஏழைகள் ஆகி வெளியூர்களுக்கு ஏகினார்கள். நாட்டுக்குடிகள் பசித்துன்பத்தால் பரிதவித்தார்கள்.

அதுகண்ட பாண்டியன் மனம் இரங்கி, பஞ்சத்தை தீர்த்தருளுமாறு சோமசுந்தரப் பெருமானை வேண்டினான், சிவபெருமான் பாண்டியன் கனவில் தோன்றி, 'மன்னனே! அன்பும் நீதியும் நிறைந்த நின்பால் ஒரு குறையுள்ளது. உன் நாட்டில் பாகம் குன்றியது: வேதமே தமது செங்கோலாகும். வேதமே நமக்கு எல்லாமாகும். வேதங்களுக்கு உறுதியான அந்தணர்களை நீ அவமதித்தாய். அதனால்தான் மழை பெய்யாமல் பஞ்சம் வந்தது. இனி வேதங்ளை காத்து, அறங்கள் பலவற்றையும் பெருக்கி வாழ்வாயாக. நாம் உனக்கு ஓர் உலாவக்கிழி தருகின்றோம். இந்தக் கிழியிலிருந்து எவ்வளவு பொன் எடுத்துச் செலவிட்டாலும் குறையாது. இதனால் உன் நாட்டின் வறுமையை நீக்குவாயாக' என்று சொல்லி, ஒரு கிழியையும் அவன் பக்கத்தில் வைத்து மறைத்தார்.

பாண்டியன் விழித்தெழுந்து, அந்த உலாவக்கிழியைச் சிவபெருமானாகவே பாவித்துச் சிம்மானத்தேற்றி வழிபட்டான்: பின்னர் அதனைப் பொதிநீக்கி எடுத்துப் பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் செலவிட்டான்: அப்பொதியிலிருந்த பொன்னாலே பாண்டியன் சோமசுந்தரரின் விமானம், மீனாட்சியம்மையின் விமானம் முதலியவைகளை அழகாக வேய்ந்தான். பாண்டிய நாட்டில் அளகாபுரி போல் செல்வம் தழைத்து ஓங்கியது. பலவகை அறிஞர்களும் நாட்டில் நிறைந்து விளங்கினார்கள். பாண்டிய நாடு பண்டு போல் பலவளம் நிறைந்து விளங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்

1. பெண்கள் பூசணிக்காயை உடைக்கக் கூடாது. ஆண்கள் தான் அதை உடைக்க வேண்டும். பிறகே பெண்கள் அதை நறுக்க வேண்டும்.
2. கர்ப்பிணிகள் தேங்காயை, சிதறுகாயாக உடைக்கக் கூடாது. சிதறு தேங்காய் உடைக்கும் இடத்திலும் இருக்கக் கூடாது.
3. சூரிய கிரகணம், சந்திர கிரகணம் போன்ற கிரகண நேரங்களில் புவிஈர்ப்பு சக்தி மிக அதிகமாக இருக்கும். எனவே அந்த சமயத்தில் வயிற்றில் உள்ள உணவு செரிக்காது. அதற்காகத்தான் கிரகணத்துக்கு சில மணி நேரங்கள் முன்னதாகவே சாப்பிடுவதை நிறுத்தி விட்டு வயிற்றைக் காலியாக வைத்துக் கொள்ளுகிறோம்.
4. கிரகண நேரத்தில் நம்முடைய கண்களைப் பறிக்கக் கூடிய கதிர்கள் வெளிப்படுகின்றன. எனவேதான் சூரிய சந்திர கிரகணங்களை நேராகக் கண்களால் பார்க்கக் கூடாது என்கிறார்கள்.
5. வீட்டில் கணவர், பிள்ளைகள் செவ்வாய் கிழமையன்று முடி வெட்டிக் கொள்ளுதல், முகச் சவரம் செய்து கொள்ளுதல் ஆகியவற்றைச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள், செவ்வாய் கிழமை முடிவெட்டுதல், சவரம் செய்தல் தரித்திரத்தைக் கொடுக்கும்.
6. சுப காரியங்களை வளர்பிறையில் செய்யுங்கள்
7. நீங்களோ, வீட்டில் உள்ளவர்களோ தலைக்கு வைக்கும் தலையணை மீது உட்காரதீர்கள்.
8. சுமங்கலிகள் வளையல், தோடு போன்றவற்றை இரவில் கழட்டாதீர்கள்.
9. கர்ப்பிணிப் பெண்கள் மலை ஏறக் கூடாது.
10. துக்கம் விசாரிக்க வருபவங்களை வாருங்கள் என்று வரவேற்காதீர்கள் அதே போல் நீங்கள் துக்கம் விசாரிக்கச் சென்றாலும் போய் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதீர்கள். தேவையானால் கிளம்புகிறேன் என்று சொல்லி வாருங்கள்.

11. புதிய ஆடைகள் அணியும் போது சிறிது மஞ்சள் தடவிய பிறகு அணியுங்கள்.
12. பிறர் அணிந்த பூவைப் பெற்று நீங்கள் சூடிக் கொள்ளாதீர்கள்.
13. கருப்பு நிறத்தில் உள்ள பொருட்களைக் கூடிய வரை தவிருங்கள். கருப்பு நிறத்தில் ஆடை அணியாதீர்கள்.
14. செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் மாமிசம் சமைக்காதீர்கள். புரட்டாசி மாதத்திலும், அமாவாசை, பௌர்ணமி மற்றும் விசேஷ நாட்களிலும் மாமிசம் சமைக்காதீர்கள்.
15. உப்பு, புளி, மிளகாய் ஆகியவற்றைப் பிறருக்குக் கொடுக்க நேர்ந்தால் அதைக் கீழே வையுங்கள். அவர்கள் எடுத்துக் கொள்ளுவார்கள். அவர்கள் கையில் நீங்கள் இவற்றைக் கொடுக்க வேண்டாம்.
16. தினமும் அல்லது விசேஷ தினங்களில் காக்கைக்கு உணவு வைத்துவிட்டுப் பிறகே சாப்பிடுங்கள்.
17. தேங்காய் மூடியில் கண் உள்ள பாகத்தை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். பிறருக்கு தேங்காய் மூடி, வாழைப்பழம், வெற்றிலை, சீவல் கொடுக்கும்போது கண் இல்லாத மற்ற மூடியை வைத்துக் கொடுங்கள். கண் உள்ள தேங்காய் மூடியை உங்கள் வீட்டில் பயன்படுத்துங்கள்.
18. வீட்டில் நடைபெற உள்ள சுப காரியங்களுக்கு சாமான்கள் வாங்க பட்டியல் போடும்போது முதலில் மஞ்சள், குங்குமம் என்று எழுதி ஆரம்பியுங்கள்.
19. கூந்தலை விரித்துப் போட்டுக் கொண்டு இருக்காதீர்கள்.
20. வெள்ளிக் கிழமையன்றும், சம்பளம் வாங்கிய பணத்திலும் உப்பு வாங்குங்கள். செல்வம் பெருகும்.
21. கால்மேல் கால்போட்டு அமருதல், ஒற்றைக் காலில் நிற்றல், உட்கார்ந்திருக்கும்போது காலை அல்லது துடையை ஆட்டிக் கொண்டிருத்தல், நிற்கும்போது ஆடிக்கொண்டே நிற்றல் ஆகியவை கூடாது. இதனால் உடலில் உள்ள சக்தி வீணாகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவாகும். எனவே இவ்வாறு செய்வது தரித்திரத்தை வரவழைக்கும் என்று கூறுவார்கள்.

22. எதையும் கொடுப்பதற்கும், வாங்குவதற்கும் வலது கையைப் பயன்படுத்தவேண்டும். இடது கையைப் பயன்படுத்தக் கூடாது. வீட்டில் குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கத்தைக் கொண்டு வரவேண்டும்.

23. சுமங்கலிப் பெண்கள் இரவில் பட்டினியாகப் படுக்கக் கூடாது. ஏதாவது சாப்பிட்டே தூங்க வேண்டும்.

24. வீட்டு விலக்கான பெண்கள் வீட்டில் துளசி மாடத்திற்கு தண்ணீர் ஊற்றக் கூடாது.

25. வீட்டு விலக்கு காலத்தில் தலைக்கு பூ வைத்துக் கொள்ளக்கூடாது.

26. விற்பதற்காக யாராவது பூக்கள் கொண்டு வந்தால் பூ வேண்டாம் என்று சொல்லக் கூடாது. நாளை வாங்கிக் கொள்ளுகிறேன் என்றே கூற வேண்டும்.

27. இல்லை, இழிவு, துக்கிரி, சனியன், கஷ்டம் போன்ற வார்த்தைகளை எந்த நிலையிலும் பேசக் கூடாது.

28. தான் பாதிக்கப்பட்டாலும் தனக்குக் கெடுதல் செய்தவருக்கு சாபம் கொடுக்கக் கூடாது. முன் ஜன்ம தொடர்ச்சியால் பிறர் நமக்குக் கெடுதல் செய்யலாம். அதை நாம் ஏற்றுக் கொண்டு இப்பிறவியிலேயே அதைத் தீர்த்துவிட வேண்டும். மறுபடியும் சாபம் கொடுத்து, எதிர்க்கெடுதல் செய்து அடுத்த பிறவியிலும் நாம் துன்பப்பட வழி செய்துவிடக் கூடாது.

29. வீட்டில் ஒட்டடை சேர்ந்தால் தரித்தரிம் வரும். எனவே பத்து தினங்கள் அல்லது பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை ஒட்டடைக் குச்சியால் ஒட்டடைகளை எடுத்து விட வேண்டும். இப்படிச் செய்ய செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்கள் ஏற்ற நாட்கள் அல்ல. மாலையில் ஒட்டடை அடிக்கக் கூடாது.

30. திவசம் தினத்தில் வாசலில் கோலம் போடவேண்டாம். யாருக்கு திவசம் கொடுக்கிறோமோ அவர் அன்றைய தினம் வீட்டிற்குள் வருவதாக ஐதீகம். எனவே கோலமிடுதலைத் தவிர்க்கவும்.

31. சாப்பாடு போடும்போது இலையைப் போட்டு முதலில் இலையில் சிறிது உப்பு அல்லது சீனியை வைத்துவிட்டுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகே மற்றவற்றைப் பரிமாற வேண்டும். வெறும் இலையில் சாதத்தைப் பரிமாறக் கூடாது.

32. தலையணை உறையை அடிக்கடி துவைத்து வெயிலில் காய வைத்துப் பயன்படுத்துங்கள். அதிலிருந்து சிறு சிறு கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் உற்பத்தியாகி நம் உடலில் சேர வாய்ப்புள்ளது.

33. வெளி இடங்களுக்குச் செல்லும்போது அங்கு கிடைக்கும் தலையணையைப் பயன்படுத்த வேண்டி வந்தால் நீங்கள் கொண்டு செல்லும் டவல், துண்டு ஆகிய ஏதாவது ஒன்றைத் தலையணையின் மீது போட்டு பயன்படுத்துங்கள். உங்கள் இடத்திற்கு வந்ததும் அந்த டவல் அல்லது துண்டை துவைத்து வெயிலில் காயவைத்துப் பிறகே மறுபடியும் பயன்படுத்துங்கள்.

34. கூடியவரை பிறர் படுக்கையில் படுக்காதீர்கள். ஆனால் வெளியூரில் லாட்ஜ், திருமண மண்டபம் போன்றவற்றில் தங்க நேரிடும் போது நீங்கள் கொண்டு செல்லும் புடவை அல்லது கணவரின் வேட்டியை விரித்து அதில் படுத்து உறங்குங்கள். ஊருக்கு வந்ததும் அதைத் துவைத்து, வெயிலில் காயவைத்து பிறகே பயன்படுத்துங்கள்.

இப்படி செய்வதால் படுக்கை தோஷம் வராது. ஏனென்றால் ஈ, எறும்பு, சிறு பூச்சிகள் சாதல், எச்சில் வடிதல், அபான வாயு பிரிதல், உடல் உறவு கொள்ளுதல் ஆகியவற்றால் படுக்கையில் தோஷங்கள் ஏற்படுகின்றன. அவற்றை நீக்கவே மேலே கூறிய ஆலோசனைகள்.

35. வீட்டிற்கும், படுக்கை அறையிலும் வாரத்திற்கு இரண்டு முறை சாம்பிராணி போடுங்கள். அந்தப் புகை அறை முழுவதும் பரவவேண்டும். அடிக்கடி ஊதுபத்தி ஏற்றி வையுங்கள். இதனால் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் சாகும். சாம்பிராணி போடும்போதோ, ஊதுபத்தி ஏற்றும்போதோ, வீட்டில் உள்ள பொருட்கள் தீப்பிடித்து விடாதபடி எச்சரிக்கையாகச் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்கள் தீர

கடன் ஏற்பட்டு விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பற்றிக் கவலைப்பட்டு எந்தப் பயனும் இல்லை. ஆனால் கடனை விரைவில் அடைக்க வேண்டும் என்ற சிந்தனையை உறுதி செய்து கொள்ளுங்கள்.

ஏனென்றால் கடன் அதற்கு வட்டி, வட்டி மேல் வட்டி என்று விஷம்போல் வேகமாக ஏறிவிடும். பலர் இன்று கடன் வாங்கப் பயப்படுவதும் இல்லை. வட்டி சேருகிறதே என்று யோசிப்பதும் இல்லை.

ஒரு குடும்பத்தலைவி கடனைப் பற்றி நினைக்க வேண்டும். வட்டிமேல் வட்டி ஏறி கடன் தலைக்குமேல் சேர்ந்த பிறகு யோசித்து எந்தப் பயனும் இல்லை.

ஆரம்பத்திலேயே கடன் வாங்குவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், தேவையான அளவே கடன் வாங்க வேண்டும். கடன் கிடைக்கிறதே என்பதற்காகக் கண்ணை மூடிக் கொண்டு கடன் வாங்கக் கூடாது. கட்டுப்பாடு தேவை. கடினமான கட்டுப்பாடு தேவை.

கடன் வாங்கி அதை அடைக்கும் வரை அதிக சிக்கனம் தேவை. கடனை அடைக்கும் காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அதற்குள் எப்பாடுபட்டாவது கடனை அடைக்க முயற்சிக்க வேண்டும்.

உறுதியான எண்ணமும், கடவுள் சிந்தனையும் இருந்தால் கடன்களை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அடைத்துவிடலாம்.

வாங்கிய கடன் விரைவில் தீர வேண்டும் என்றால் கடன் திரும்பக் கொடுப்பதை செவ்வாய், சனி, ஞாயிறு ஆகிய ஏதாவது ஓர் நாளில் திரும்பக் கொடுக்க ஆரம்பியுங்கள். அல்லது அனுஷம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அசுவினி நட்சத்திரம் உள்ள நாளில் சிறிய அளவு பணமாவது கொடுக்க ஆரம்பியுங்கள். அல்லது சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஏற்படும் நாட்களில் கிரகணம் விலகும் சமயத்தில் பணத்தைத் திரும்பக் கொடுக்க ஆரம்பியுங்கள். முழுக்கடன் தொகை மிக விரைவாக, சர சர என்று தீர்ந்து நீங்கள் கடனிலிருந்து விடுபடுவீர்கள்.

இதற்கு கீழ்க்கண்ட ஸ்ரீந்ருசிம்ஹ ஸ்தோத்திரத்தை தினமும் காலையில் குளித்துவிட்டு பூஜை அறையில் ஸ்ரீ லட்சுமிநரசிம்மரை மனதில் நினைத்துக் கொண்டு கூறி வரவும்.

## அன்னையின் அருமை

பிறந்த வீட்டை விட்டு புகுந்த வீடு போகும் வரை தெரியவில்லை அம்மாவின் அருமை... எட்டு மணிவரை தூங்கினாலும் எழுப்ப யோசித்த அம்மாவின் அருமை ஐந்து மணிக்கு அலாரம் அடித்த போது தெரிந்தது... படித்த புத்தகத்தை படுக்கையிலே போட்டாலும் பார்த்து எடுத்து வைத்த அம்மாவின் அருமை எதையும் எடுத்த இடத்தில் வைக்க வேண்டும் என்ற போது புரிந்தது... பசித்த நேரத்தில் சோறூட்டிய அம்மாவின் அருமை பத்துப்பாத்திரம் தேய்க்கையில் தெரிந்தது... என்னைப் பத்து மாதம் சுமந்த அம்மாவின் அருமை எனக்கு குழந்தை பிறக்கையில் முற்றிலும் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலுமிச்சை வைத்தியம்

## பிரசவம் சுகமாக

கர்ப்பிணிப் பெண்கள் வேதனையின்றி சுகமாகப் பிரசவிக்க வேண்டுமானால் கர்ப்பம் தரித்த 4வது மாதத்திலிருந்து பிரசவம் வரை தினமும் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு எலுமிச்சம் பழரசத்தைத் தண்ணீர் விட்டுத் தேன் கலந்து குடித்து வரவேண்டும்.

எலுமிச்சை மர வேர், இலுப்பை மர வேர் இரண்டையும் சம பங்கு எடுத்து உலர வைத்துப் பொடி செய்து ஒரு கரண்டி பொடியில் ஒரு கரண்டி தேன் விட்டுக் கலந்து கர்ப்பிணிப் பெண்கள் உண்டு வந்தால் சுகப்பிரசவமாகும்.

## விஷங்களுக்கு

உடலிலுள்ள விஷங்களை எடுக்க வேண்டுமானால் விஷத்தை வாந்தி எடுத்த பிறகு எலுமிச்ச ரசத்தைத் தண்ணீரில் பிழிந்து குடித்துவிட வேண்டும். விஷம் முறிந்து போகும்.

எலுமிச்சம் பழ விதைகளையும், உப்பையும் கலந்து அரைத்துக் குடித்துவிட்டால் தேள் கடி விஷம் இறங்கி விடும். கடி வாயிலிலும் எலுமிச்சம் பழ ரசத்தையும் உப்பையும் கலந்து போட்டால் கூட நலம் விளையும்.

## பித்தத்திற்கு

சிறு இலாய்ச்சிக் கொட்டைகளைப் பொடி செய்து கொண்டு எலுமிச்சம் பழ ரசத்தில் போட்டுக் குடிக்க வேண்டும். எலுமிச்சம் பழச் சுளைகளைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்துக் கொண்டு உப்பு, மிளகு இவற்றை நன்றாகப் பொடி செய்து கொண்டு களைகளை இவற்றில் புரட்டி வாயில் போட்டுச் சுவைக்கவும்.

எலுமிச்சை மரத்தின் வேரை எடுத்து தண்ணீரோடு நன்றாக அரைத்து தேன் கலந்து குடிக்கவும் ஒரு கரண்டி எலுமிச்சை ரசத்தில் இரண்டு கரண்டி தேன் கலந்து உள்ளங்கையில் வைத்து நக்கவும். எலுமிச்சம் பழத் தோல்களை நேரடியாக நெருப்புப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக் கருக விட்டு அதன் சாம்பலை உள்ளங்கையில் போட்டுத் தேன் கலந்து நக்கவும். வேக வைத்த வெள்ளைச் சீரகம், இலவங்கம், மிளகு இவைகளைப் பொடி செய்து கொண்டு எலுமிச்சம் பழ ரசத்தில் போட்டு சிறிதளவு தண்ணீர் கலந்து குடித்து வரலாம். வேக வைத்த புதினாத் தண்ணீரில் எலுமிச்சம் பழம் பிழிந்து குடிக்கலாம்.

மேற்சொன்ன முறைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைமுறையில் கையாண்டு வரப் பெற்றால் பித்தம் தரும் தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

## இரத்தம் சுத்தமாக

நாம் உண்ணுகிற உணவு ஜீரணிக்கப்பட்டு ரசமாகிப் பின் இரத்தத்தில் கலந்து உடலில் ஒவ்வொரு பாகத்திற்கும், ஊட்டத்தை வழங்குகிறது. கழிவுப் பொருள்களை வெளியேற்றும் உறுப்புகளாகிய நுரையீரல், குடல், மூத்திரப்பை, தோல் ஆகியவை சரியாக இயங்கா விட்டாலும் முறையற்ற உணவை உட்கொள்வதாலும் உடற்பயிற்சி சரியாகச் செய்யாததாலும், இரத்த ஓட்டம் சீராக நடைபெறாமல் நாளடைவில் இரத்தத்தில் விஷத்தன்மை ஏற்பட்டு விடுகின்றது. இந்நிலையில் எலுமிச்சம் பழ ரசத்தை தண்ணீரில் கலந்து உட்கொண்டோமானால் விஷத்தை முறித்து இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது. நாள்தோறும் காலையிலும் மாலையிலும் ரசத்தைப் பருகலாம்.

## உடல் பருமன்

தொந்தி பெருத்து உடல் பருத்திருப்பவர்கள் பார்ப்பதற்கு விகாரமாகக் காணப்படுவர். இத்தகையவர்களுக்கு ஏதேனும் ஓரிரு நோய் தவறாமல் இருந்து கொண்டுதான் இருக்கும். அளவிற்கதிகமான பருமனையும் எடையையும் குறைத்தலான்றி நோய்கள் குணமாகா. இத்தகையவர்கள் இயற்கை சிகிச்சை நிலையத்தில் தொடர்பு கொண்டு எலுமிச்சை ரசத்தோடு தேன் கலந்து தண்ணீர் மட்டும் அருந்தி உண்ணாவிரதம் இருந்து கொழுப்பைக் கரைத்து எடையைக் குறைத்துக் கொண்டு உடல் நலத்தோடு வாழலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அன்னையின் மகிமை

- தமிழ் ஒன்றுதான் தெய்வத் தமிழ் எனப்படும். மொழி, தெய்வ இந்தி, தெய்வ ஆங்கிலம் என்றெல்லாம் வழக்கில் இல்லை. சமஸ்கிருதம் தெய்வத்தின் மொழியல்ல: தேவர்களின் மொழி என்கிறார்கள்.

- "ஓம்" என்கிற ஓங்காரத்தின் பொருளை தமிழ்க்கடவுள் எனப்படும். முருகன் சிவபெருமானுக்கு கொஞ்சு தமிழால் விரித்துரைத்தான் என்பது வரலாறு. ("கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரிய கொஞ்சித் தமிழால் பகர்வோனே" - திருப்புகழ்)

- தெய்வம் எல்லா மொழிகளுக்கும் பொது: ஆனால், அந்தத் தெய்வம் தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிக்குச் சங்கம் கண்டது என்று 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த மூன்றாம் தமிழ்ச்சங்க நூலான இறையனார் களவியல் உரைநூல் சான்று பகிர்கின்றது.

- உலகை உருவாக்க உயர்நிலை உயிர்களான சதாசிவர்களைப் பணிகொள்ள இறைவனால் கற்பிக்கப்பட்ட முதல்மொழி தமிழ் என்று வள்ளலார் "தமிழ்" என்ற சொல்லுக்கு எழுதிய விரிவுரையில் உறுதிபட உரைக்கின்றார்.

- "முத்தியை, ஞானத்தை, முத்தமிழ் ஓசையை" என்று இறைவனே முத்தமிழ் ஓசையாக உள்ளவன் என அடையாளம் காட்டுகின்றார். திருமூலர் - தமிழ் மூவாயிரம் திருமந்திரத்தில்.

- கோயில்கள் எல்லாம் தமிழன் கண்டவை: தமிழ் நாட்டில் உள்ள 1008 சிவாலயங்களும், 108 வைணவத்தலங்களும் இதற்குச் சான்று. தமிழகத்தைத் தாண்டினால் இந்தியாவில் சொல்லும் தரத்தில் பெரிய கோயில்கள் ஏதும் இல்லாததும் இதை உறுதிப்படுத்தும். தமிழக அரசன் முத்திரையில் கோயில் இடம்பெற்றிருப்பதும் இதற்கு மேலும் ஒரு வலிய சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடக்கே கையாலயத்தில் உள்ளதாகக் கூறப்படும் சிவபெருமான் தெற்கே தமிழ்நாட்டைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். தமிழின் இனிமை.

- தமிழிசையின் இனிமை ஆகியவற்றுக்காக ஏங்கி இறைவன் தெற்கே தில்லைக்கு வந்து கூத்தாடினானாம். ஆடும் போது களைப்பு தீர இடையிடையே தென்றலின் சுகமும் பெறலாம் எனத் தெற்கிற்கு வந்ததாக திருவிளையாடற்புராணம் கூறுகின்றது.

- தமிழகத்தைத் தாண்டி வடக்கே நடராசருக்குக் கோயில் கிடையாது.

- தென்நாட்டில் தான் சைவம் உருவானதாக காரண ஆகமம் கூறுகின்றது.

- தமிழகக் கோயில்களில் கி.பி 7ம் நூற்றாண்டு வரை தமிழில்தான் வழபாடுகள் நடந்தன என்று திருஞானசம்பந்தர் பல பாடல்களில் பதிவு செய்திருக்கிறார். (உ - ம்: "செந்தமிழ் தெய்வமறை நாவர்": "ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் தொழுதேத்தும் தில்லை")

- கி.பி 15ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் - முருகனை, 'எங்கே நினைப்பினும் அங்கே என் முன்வந்து எதிர்நிற்பன்' என்று திருவண்ணாமலையில் பாடிய போது கோயில் தூணில் திரளான மக்களிடையே முருகன் காட்சி அளித்தானாம். அது ஆண்டுதோறும் 'கம்பத்திளையனார் காட்சி' என்று, அக்கோயிலில் விழா எடுத்துக் கொண்டாடப்படுகின்றது.

- சற்றேறக் குறைய 17 ஆம் நூற்றாண்டில் மதுரை மீனாட்சியம்மன் கோயியில் 'மீனாட்சி அம்மைப் பிள்ளைத்தமிழ், அரங்கேற்றத்தில், 'தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே வருக' என்று பாடிய அளவில் மீனாட்சி அம்மன் சிறுமியாக ஓடிவந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய குமரகுருபரர்க்குத் திரளான மக்களிடையே முத்துமாலை அணிவித்து மறைந்ததாகக் கோயிலில் கல்வெட்டு கூறுகின்றது.

- தமிழால் பாடி எலும்பைப் பெண்ணாக்கி இருக்கிறார் சம்பந்தர் தமிழால் அப்பர்: தமிழால் பாடி முதலை உண்ட பாலனை எழுப்பி இருக்கிறார் சுந்தரர்: தமிழால் பாடி ஊமைப் பெண்ணைப் பேச வைத்துள்ளார் மணிவாசகர். பாடி கடலில் கட்டப்பட்ட நிலையில் கல்லை மிதக்கச் செய்திருக்கிறார்.

- தமிழ்த் திருமுறைகளால் நடந்த அற்புதங்கள் மேருமலை போல உயர்ந்து நிற்கின்றன: அதனெதிராக, வடமொழியில் புலமைபெற்ற வள்ளலார் வடமொழியில் நிகழ்ந்ததாக ஓர் அற்புதத்தையும் அணு அளவிலும் காணமுடியவில்லை என்று ஒரு பாட்டில் ஒப்பிட்டுப் பாடி இருக்கின்றார். (நின்கலைக்கும் வடகலையின் முதற்கலைக்கும் உறுகணக்கு உயர் பொன் மலைக்கும் அனு நிலைக்கும் உறா வன்றொண்டப் பெருந்கையே - திருவருட்பா)

## சுந்தரர்

வறந்திடு பொய்கைமுன் நிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப அன்னதால்
இறந்திடு மகன்வளர்ந்து எய்தப் பாடல்ஒன்று
அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்

## மாணிக்கவாசகர்

தேனூறு வாசங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிதர் மாணிக்க வாசகனை
யானூறு படாத வகை எப்போதும் இறைஞ்சுவனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

முன்னிரண்டு மாதங்கள் என்னை
அறியாமல் குழம்பித் தவித்ததாய்!
மூன்றாம் மாதம் உன் வயிறு
என்ற சிப்பிக்குள் முத்தாய் நானிருப்பதை
அறிந்தாய்!
நான்காம் மாதத்தில் மசக்கை
அனுபவித்தாய்!
ஐந்தாம் மாதத்தில் அறுசுவை உணவு
உண்டு என்னை மகிழச் செய்தாய்!
ஆறாம் மாதம் பால் சுரக்க உள்ளத்தில்
இன்புற்றாய்!
ஏழாம் மாதம் என் அசைவுகளை
உணர்ந்தாய்!
எட்டாம் மாதம் நான் உதைப்பதை அழகாய்
ரசித்தாய்!
ஒன்பதாம் மாதம் நான் அஞ்சி விடக் கூடாது
எனப் பலவித வளையல்கள் அணிந்தாய்!
பத்தாம் மாதம் ஒருமுறை நான் அம்மா
என அழைப்பதற்காக பலமுறை அம்மா
அம்மா என பிரசவத்தில் அலறினாய்!
என் பசி போக உன் இரத்தத்தை
பாலாக்கினாய்!
நான் பிறந்த பின் என்னை
இவ்வுலகத்திற்கு அறிமுகப்படுத்தினாய்!
நான் வளர்ந்த பின் எனக்கு இவ்வுலகத்தை
அறிமுகப்படுத்தினாய்!
இவ்வளவு செய்த உனக்கு நான் என்ன
செய்வது!
அடுத்த ஜென்மத்தில் கடவுள்கிட்ட கருவறை
கேட்டு உன்னை மகளாய் சுமக்கிறேன்!
அன்பு அன்னையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

கடந்த 27.01.2023 எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவன் திருத்தாழ்களில் இணைந்திட்ட, எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு **அமரர் நவரத்தினம் லோகேஸ்வரி** அவர்கள், சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் வைத்தியர்கள், அவர்களோடு இணைந்த தாதியர்கள், ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் அளித்த அன்புள்ளங்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அஞ்சலி பதாகைகள் வெளியிட்டோர், மலர் வளையங்கள் சாற்றியோர், உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு வாயிலாக பங்கேற்ற உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மரணச்சடங்கில், அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், இச் சடங்குகளை சிறப்புறச் செய்வதற்கு ஆன பணிகள் பல செய்த அன்பர்களுக்கும் சபிண்டிகர கிரியைகள் நடாத்திய குருமாருக்கும், இந்த மலரின் ஆக்கத்திற்கு உதவிய அத்தனை உள்ளங்கட்கும் இந்த மலரினை அச்சிட்டுதவிய பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு.காராளர் நவரத்தினம்,**
**விமலாஸ்**
**குடும்பத்தினர்**
**தயால்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி




* அமரரைக்குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட எம் முன்னோரின் வேண்டுகோள்கள்

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும் சில வரிகள்

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talk)

எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள்.

சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Tolerance)

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)

மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)

புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org